**செ.வெ.எண்:05** **நாள்:02.08.2019**

## பத்திரிக்கைச் செய்தி

சமூக நலத்துறையின் கீழ், அரியலூர் மாவட்டத்தில் பாதிக்கப் பட்ட மக்கள் மத்தியில், பெண்களுக்கு, உதவும் வகையில் "சகி" என்ற பெண்கள் வள மையம் (OSC) துவங்கப்பட உள்ளது. இதில் பணிபுரிய, விரும்புவோர், தகுதியின் அடிப்படையில் விண்ணப்பிக்கலாம்.

பெண்கள் வள மையம் (OSC Administator – 1 பணியிடம்) நிர்வகிப்பவர் பதவிக்கு, கல்வித் தகுதி MSW (Counselling psychology or Development Management), வயது வரம்பு - 35க்குள் இருத்தல் வேண்டும். முன் அனுபவம் - பெண்களுக்கு எதிராக வன்கொடுமை தடுப்பு செயல்பாடு திட்டத்தில் (அரசு/தனியார்) 4 வருடம் பணி புரிந்த அனுபவம் மற்றும் ஒரு வருடம் ஆலோசனை வழங்கும் பணியில் ஈடுபட்ட அனுபவம் தேவை. பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். தங்கி பணிபுரியும் பதவி ஆகும். உள்ளூரை சார்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். தொகுப்பு ஊதியம் - ரூ.30,000/-.

Senior counselor: MSW (Counseling psychology or Development Management) -1 பணியிடம், வயது வரம்பு - 35க்குள் இருத்தல் வேண்டும். முன் அனுபவம் - பெண்களுக்கு எதிராக வன்கொடுமை தடுப்பு செயல்பாடு திட்டத்தில் (அரசு/தனியார்) 2 வருடம் பணி புரிந்த அனுபவம் மற்றும் ஒரு வருடம் ஆலோசனை வழங்கும் பணியில் ஈடுபட்ட அனுபவம் தேவை. தங்கி பணிபுரியும் பதவி ஆகும். உள்ளூரை சார்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். தொகுப்பு ஊதியம் - ரூ.20,000/-.

Case worker 1&2 பணியிடங்கள் -2, கல்வித் தகுதி BSW (Counseling psychology or Development Management), வயது வரம்பு -35க்குள் இருத்தல் வேண்டும். முன் அனுபவம் - பெண்களுக்கு எதிராக வன்கொடுமை தடுப்பு செயல்பாடு திட்டத்தில் (அரசு/தனியார் ) 2 வருடம் பணி புரிந்த அனுபவம் மற்றும் ஒரு வருடம் ஆலோசனை வழங்கும் பணியில் ஈடுபட்ட அனுபவம் தேவை.தங்கி பணிபுரியும் பதவி ஆகும். உள்ளூரை சார்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். தொகுப்பு ஊதியம் - ரூ.12,000/-.

IT STAFF - பணியிடம் -1, கல்வித் தகுதி -B.Sc (Computer Science) / M.Sc (Computer Science) விண்ணப்பிக்கலாம், வயது வரம்பு - 35க்குள் இருத்தல் வேண்டும். முன் அனுபவம் - பெண்களுக்கு எதிராக வன்கொடுமை தடுப்பு செயல்படும் அரசு/தனியார் நிறுவனம் / அலுவலகத்தில் நிர்வாகப் பிரிவில் பணி புரிந்த அனுபவம் உள்ளவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும். தங்கி பணிபுரியும் பதவி ஆகும். உள்ளூரை சார்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். தொகுப்பு ஊதியம் - ரூ.18,000/-.

Multipurpose Helperபணியிடம் -1, நிர்வாக அமைப்பின் கீழ் பணி புரிந்தவராகவும் / சமையல் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். 24 மணி நேரம் சேவை அளிக்கும் வகையில் Shift முறையில் பணி அமர்த்தப்படும். Security Guard/ Driver - நிர்வாக அமைப்பில் பணி புரிந்த அனுபவம் தேவை. பெண்களுக்கு முன் உரிமை வழங்கப்படும். உள்ளூரைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். தொகுப்பு ஊதியம் - ரூ.10,000/-. 01.07.2019 அன்று வயது 35க்குள் இருக்க வேண்டும்.

மேற்கண்ட பணியிடங்களுக்கு விண்ணப்பிங்களை மாவட்ட சமூக நல அலுவலகம், அறை எண்.20, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரியலூர் - 621 704 என்ற முகவரிக்கு **16.08.2019-க்குள்** அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**